புதுன்கிழமை

உபதேச நூன்மாலையும் அநுவாத நூன்மாலையும்

ஏகான்ம விவேகம்:

1947 ஆம் ஆண்டு ஒருநாள் 'திருச்சுழி வெண்பா அந்தாதி' என்ற புத்தகத்தைப் பற்றிக் குறிப்பிட்ட ஸ்ரீ பகவான் "நான் மலைமேல் இருந்தபோது நாயனாவிடம் வெண்பா லக்ஷணத்தைச் சொல்லி வடமொழியிலோ, தெலுங்கிலோ வெண்பா எழுதும்படி கூறினேன். நாயனா, நரசிங்கராவ் ஆகியோர் பலமுறை முயன்றும் பலனில்லை" என்று சூரிநாகம்மாவிடம் கூறினார். "நாயனாவே இந்த வெண்பா (சுக்ல சந்தஸ்) முறையில் பாடல் இயற்ற முடியவில்லை என்றால் ஸ்ரீ பகவான்தான் தெலுங்கில் எழுத வேண்டும்" என்றார் சூரி நாகம்மா. மூன்று நாட்களுக்குப் பிறகு ஸ்ரீ பகவான் சிறு காகிதத் துண்டுகளில் நாகம்மாவிடம் கொடுத்துத் தான் தெலுங்கிலும் பின்னர் தமிழிலும் எழுதிய 'வெண்பா' சுலோகங்களைக் காட்டினார். நாகம்மாவும் முருகனாரும் ஸ்ரீ பகவானிடம் மேலும் சில வெண்பாக்களை தெலுங்கில் இயற்றினால் அந்த பாஷைக்கும் ஒரு புதிய சந்தஸ் கிடைத்த பெருமை உண்டாகும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

மறுநாள் ஸ்ரீ பகவான் மேலும் இரண்டு வெண்பாக்களை இயற்றி, 'ஆத்ம பஞ்சகம்' என்ற தலைப்பில் ஆதிசங்கரரின் பாடல் முன்பே ஒன்று உள்ளதால், இதற்கு "ஏகாத்ம பஞ்சகம்" என்று பெயரிடலாம் எனக் கூறியதுடன் இதைச் சங்கராபரண ராகத்தில் சீர்வரிசைகளுக்குத் தக்க நிறுத்திப்பாட வேண்டும் என்றும் விரிவாகக் கூறியருளினார்.

ஸ்ரீ பகவான் இதனைத் தமிழில் இயற்றியதும் முருகனார் அதற்கு ஒரு முடிவுரைப் பாடல் இயற்றினார். இதனையும் ஸ்ரீ பகவான் தெலுங்கில் மொழிபெயர்த்தும் பின்னர் கலிவெண்பாவாக அமைத்தும் மற்றும் மலையாள மொழியிலும் இதனை மொழிபெயர்த்து அருளினார். 'ஏகாத்ம பஞ்சகம்'; 'ஏகாத்ம விவேகம்'; 'ஏகாத்ம தத்வம்' என்று வழங்கப்படும் இதுவே ஸ்ரீபகவானால் இயற்றப்பட்ட மூலக் கிரந்தங்களில் கடைசியாகும்.

அப்பளப்பாட்டு:

அன்னை அழகம்மை மலைமேல் சமைக்க ஆரம்பித்த காலங்களில், ஒருநாள் பகவானுக்கு இரட்டை அப்பளம் பிடிக்குமே, அதைச் செய்யலாமே என்றெண்ணினார். பகவானுக்குத் தெரியாமல் ரகசியமாக ஊருக்குள் சென்று எச்சம்மாள், முதலியார் பாட்டி இவர்களிடமிருந்து அப்பளம் செய்வதற்குத் தேவையான சாமான்களைச் சேகரித்துக் கொண்டு வந்தார்.

அவர் எங்குப் போகிறார் என்பதை மரத்தடியிலிருந்து ஸ்ரீ பகவான் பார்த்துக் கொண்டே இருந்தார். டவுனுக்குச் சென்ற அழகம்மை தயாராகவிருந்த, அப்பளமிடுவதற்கு வேண்டிய சாமான்களை எடுத்துக்கொண்டு விரூபாக்ஷ குகைக்கு வந்து அவற்றைப் பத்திரமாக வைத்துவிட்டார். ஸ்ரீ பகவான் ஒன்றும் தெரியாதவர் போலிருந்துவிட்டார்.

தரிசனத்திற்கு வந்தவர்களெல்லோரும் சென்ற பிறகு ஸ்ரீ பகவான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட்டார். சாவகாசமாக அம்மா எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டு அப்பளம் இடுவதற்குத் தயாரானார். சுமார் இருநூறு முன்னூறு உருண்டைகள் இருந்தன. தனியாக அவ்வளவையும் அப்பளமாக்க முடியாது. ஸ்ரீபகவானுக்கு அப்பளமிடத் தெரியும் என்பது அழகம்மைக்கும் தெரியும். ஆகையால் மெதுவாக ஸ்ரீ பகவானிடம் அப்பளம் இடுவதற்கு ஒத்தாசை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்று ஸ்ரீபகவான் அம்மாவைப் பார்த்து, "நீ எல்லாவற்றையும் விட்டுவிட்டாயல்லவா! கிடைத்ததைச் சாப்பிட்டுச் சும்மா

கிடக்காமல் இவையெல்லாம் எதற்கு! நான் அப்பளம் செய்ய வரமாட்டேன். நீ செய்தாலும் சாப்பிட மாட்டேன். எல்லாவற்றையும் நீயே செய்து சாப்பிடு" என்று சொல்லிச் சும்மாயிருந்து விட்டார்.

அன்னையும் சிறிது நேரம் சும்மாயிருப்பதும், திரும்பவும் கூப்பிடுவதுமாயிருந்தார். அம்மா தன்னை விடமாட்டார் என்று தோன்றியது ஸ்ரீபகவானுக்கு. சரி, அப்படியானால் "நீ இந்த அப்பளம் செய். நான் வேறு ஒரு அப்பளம் செய்கிறே" னென்று, மேற்கண்ட அற்புதமான ஞானப் பொக்கிஷமாகிய "அப்பளப்பாட்டை" அன்னையை முகாந்திரமாக்கி நம் அனைவருக்கும் ஸ்ரீ பகவான் பாடியருளினார்.

பகவான் பின்னாளில் இதைப்பற்றிக் கூறும்போது, "அன்னை சாதப்பாட்டு, குழம்புப் பாட்டு என வேதாந்தபரமான பாடல்களை எப்பொழுதும் பாடிக்கொண்டே வேலை செய்வது வழக்கம். அப்பளப்பாட்டு என ஒருவரும் இதுவரை எழுதியதில்லை. எனவேதான் இதை எழுதவேண்டுமெனத் தோன்றியது. பாடுவது அன்னைக்கு மிகவும் பிடிக்கும். இதையும் கற்றுப் பாடட்டுமே என்றுதான் இயற்றினேன். அவள் அப்பளம் செய்து முடிக்கையில் எனது அப்பளப்பாட்டும் தயாராகிவிட்டது. நான் இதை (அப்பளப்பாட்டை) புஜிக்கிறேன். நீ தயாரித்த அப்பளத்தை நீ சாப்பிடு என்று கூறினேன்" என்றார்.

ஆன்மவித்தை:

ஒருநாள் அடியவர் ஒருவர் ஸ்ரீபகவானிடம், "ஆன்மவித்தை எப்படிச் சுலபமாகும்? முக்தி அவ்வளவு சுலபமா? ஆனால் 'ஐயே! அதிசுலபம் ஆன்மவித்தை' என்று கூறப்பட்டுள்ளதே" என்று கேட்டார். உடனடியாக ஸ்ரீபகவான், "எனக்கெப்படித் தெரியும்?" என்று முருகனாரைச் சுட்டிக்காட்டி அவரல்லவோ எழுதினார்? அவரைத்தான் கேட்க வேண்டும்" என்று கூறினார். தமிழ் இலக்கியத்தில் பிரசித்தி பெற்ற இசைநாடக ஆசிரியர் கோபாலகிருஷ்ண பாரதியின் "நந்தனார் சரித்திரம்" மக்களின் மனதைக் கவர்ந்ததொன்று. அதில் ஒரு பாடல் 'ஐயே! மெத்தக்

கடினம்; உமதடிமை ஐயே! மெத்தக் கடினம்' என்பது. ஸ்ரீமுருகனார் இதைத்தழுவி, 'ஐயே! அதிசுலபம் ஆன்மவித்தை ஐயே அதிசுலபம்' என்ற பல்லவியையும், அனுபல்லவியையும் எழுதி அதன்மேல் அவரால் அதைத் தொடர்ந்தெழுத முடியாத காரணத்தால் சரணங்கள் எழுதி பூர்த்தி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் ஸ்ரீபகவானிடம் சமர்ப்பித்தார். இது 1927இல் நடந்தது. முதலில் பகவான் ஒரு சரணமெழுதி முடித்தவுடன் முருகனார் குறைந்தது 4 சரணங்களாவது வேண்டுமென விழைய பகவான் மேலும் 3 எழுதி முடித்துப் பாடலைப் பூர்த்தி செய்தார். ஆனால் நந்தனார் பாட்டில் கடைசி சரணத்தில் பொன்னம்பலத்தைக் குறிப்பிட்டுக் கூறியிருப்பதுபோல் அண்ணாமலையைக் கூறாமல் விட்டதை நினைவுகூர்ந்து கடைசி சரணத்தையும் எழுதியதாக ஸ்ரீபகவானே விவரித்துள்ளார்.

தேவிகாலோத்தர – ஞானசார விசார படலம்:

ஸ்ரீதேவிக்கு உபதேசிக்கப்பட்ட இந்தப் பரவித்தையானது காலத்தைக் கடந்த ஞானத்தைப் பொருளாகக் கொண்டது. அனாதிகாலம் முதலே இந்து சமய பாரம்பரியத்தில் வேதத்திற்குச் சமமான பிரமாண முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தெய்வ வாக்குகளாகவும் கருதப்படுபவை. 28 ஆகம சாஸ்திரங்கள், அவற்றில் ஒரு உப ஆகமமான ஸ்ரீதேவிகாலோத்தரம் 24000 பாக்களைக் கொண்டது. ஸ்ரீபகவானால் மொழிமாற்றம் செய்யப்பட்டு இங்கருளப்பட்ட 85 பாடல்களும் ஞானகாண்டத்தில் 65வது அத்தியாயத்தில் உள்ளவை. ஞானமார்க்கத்தை விரிவாக அறைதலுடன் அதனை ஆசிரயித்தவன் அனுசரித்தற்குரிய அத்வைதபரமான ஆசாரங்களைக் கூறி சாதகர்களை ஊக்குவிக்கும் உபதேசங்களையும் அருளுகிறது.

ஸ்ரீ பகவான் மலைமீது விரூபாக்ஷ குகையிலிருந்த காலத்தில், அன்பர் ஒருவர் கிரந்தாக்ஷர ஸம்ஸ்க்ருத ஆகம நூலின் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு வந்து ஸ்ரீபகவானிடம் காட்டினார்.

அதைப் புரட்டிப் பார்த்த ஸ்ரீபகவான், கிரியைகளையும் சரியைகளையும் பற்றி விஸ்தாரமாகக் கூறும் ஆகமங்களுக்குள், அதிலும் உப ஆகமங்களுக்குள், பூரண அத்துவித ஞானத்தைப் போதிக்கும் தேவிகாலோத்தர – ஞானாசார விசார படலம், சர்வ ஞானோத்தர – ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம் இரண்டிலும் நிர்விகார பரப்பிரம்மத்தைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்.

இந்த இரண்டு பிரகரணங்களும் ஈசனால், தேவிக்கு உபதேசிக்கப் பட்டதொன்றும்; குகனுக்கு உபதேசிக்கப்பட்டதொன்றுமாகும். இவை இரண்டும் தமது அனுபூதியை ஒட்டியேயிருப்பதைக் கண்டு, இவற்றை ஒரு புத்தகத்தில், நாகராக்ஷரத்தில் அழகாக அச்சுப்போல் எழுதிவைத்துக் கொண்டார்.

விரூபாக்ஷ குகையிலிருக்கும் போதே 85 சுலோகங்கள் கொண்ட, தேவிகாலோத்தர – ஞானாசார விசார படலத்தை, சுலோகத்திற்கொரு வெண்பாவாக தமிழில் மொழி பெயர்த்து அருளினார். அது அக்காலத்திலேயே அன்பர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஸ்ரீபகவான் கீழ்வரும் அவதாரிகையை இதற்கு அருளி யுள்ளார்:

> *"உபாகமங்களு ளொன்றாய 'ஸ்ரீ தேவிகாலோத்தர'த்தின் கண் சகலாகம சாரத்தின் சாரமாய்ப் பக்குவான்மாக்கள் பரிபாக காலாநந்தர மடையத்தகுந்த ஞானத்தையும் ஆசாரத்தையும் விவரித்துப் பரமசிவன் பரமசிவைக் கருளிச்செய்த இந்த ஞானாசார விசார படலக் கிரந்தமானது, சனன மரண ரூப சம்சார துக்க சமுத்திரத்தில் வீழ்ந்து முங்கிப் பொங்கித் தத்தளிக்குஞ் சீவர்களைத் தாங்கி நேர்வழி கொடுபோய் முத்தியெனு மக்கரையிற் சேர்க்கும் அரும் பெருந் தோணியாயிருத்தலின், முமுட்சுக்க ளனைவருந் திகைத்து வழிதப்பி யலையாம லிதன் றுணையால் நேர்மார்க்கமே சென்று அச்சாந்தானந்த பரமபத மடைவாராக."*

ஸ்ரீ
ஏகாத்ம விவேகம்

1. தனதியல்பாகிய சொரூபத்தை மறந்து 'உடலே நான்' என்று எண்ணிப் பல பிறவிகளை எடுத்து இறுதியில் தன்னை உணர்ந்து தானாக நிலைபெறுவது, கனவில் உலகம் முழுதும் சுற்றிவிட்டு இறுதியில் விழிப்பது போன்றது.

2. எப்போதும் ஆத்ம சொரூபமாகவே தான் இருந்தும், நான் யார்? நான் இருக்கும் இடம் எது? என்று தன்னைத் தானே விசாரிப்பவன், அதே கேள்விகளைக் கேட்கும் மது உண்டு மயங்கிய மனிதனுக்கு இணையாவான்.

3. சத்-சித்-ஆனந்த ஆத்மாவாகிய தனக்குள் உடல் இருக்கவும், ஜடமான உடலுக்குள் தான் இருப்பதாக அஞ்ஞானத்தினால் நினைப்பவன், சித்திரத்திற்குள், அதற்கு ஆதாரமான திரை இருக்கிறது என்று கருதுபவனைப் போன்றவனாவான்.

4. ஆபரணங்கள் அனைத்தும் ஆதாரவஸ்துவாகிய பொன்னால் ஆனவை, அதைவிட்டு வேறாகாது. அதுபோல் ஆத்மாவாகிய சொரூபத்தைவிட்டுச் சரீரத்திற்கு இருப்பு ஏது? அஞ்ஞானி தன்னைத் தேகம் என்பான். தன்னை உணர்ந்த ஞானி அனைத்தையும் தானாக, ஆன்மாவாக உணர்வான் என்பதை உணர்.

I. உபதேச நூன்மாலை

ஸ்ரீ
ஏகான்ம விவேகம்

நூல்

(கலிவெண்பா)

1. தன்னை மறந்து தனுவேதா னாவெண்ணி
யெண்ணில் பிறவி யெடுத்திறுதி — தன்னை
யுணர்ந்துதா னாத வுலகசஞ் சாரக்
கனவின் விழித்தலே காண்க — வனவரதம்

2. தானிருந்துந் தானாகத் தன்னைத்தா னானெவன்
யானிருக்குந் தான மெதுவெனக்கேட் — பானுக்கு
யானெவ னெவ்விடம் யானுள னென்றமது
பானனை யீடு பகர்ச்சித் — தானந்தத்

3. தன்னுட் டனுவிருக்கத் தானச் சடவுடலந்
தன்னு ளிருப்பதாத் தானுன்னு — மன்னவன்
சித்திரத்தி னுள்ளுளதச் சித்திரத்துக் காதார
வத்திர மென்றெண்ணு வான்போல்வான் — வத்துவாம்

4. பொன்னுக்கு வேறாகப் பூடண முள்ளதோ
தன்னை விடுத்துத் தனுவேது — தன்னைத்
தனுவென்பா னஞ்ஞானி தானாகக் கொள்வான்
றனையறிந்த ஞானி தரிப்பாய் — தனதொளியால்

5. உள்ளத்துள் எப்போதும் உள்ளது, ஒன்றான அந்த ஏகாத்ம வஸ்துவே. ஆதி காலத்தே குரு தக்ஷிணாமூர்த்தி அவ்வஸ்து சொரூபத்தைச் சொல்லாமல் சொல்லி (மௌன வியாக்கியானத்தால்) தெரியுமாறு செய்தார் என்றால், அதை இப்போது யாரால் கூற இயலும்!

6. ஏக ஆன்ம சொரூபமாக விளங்கும் குரு ரமணன், ஏகான்ம பஞ்சகம் என்னும் நூல் மூலம், ஏக ஆன்மாவின் இந்த உண்மை நிலையை உள்ளவாறு தெளிவித்து, தேகமே ஆன்மா என்ற அன்பர்களது தேக பாவனையை நாசமாக்கினான்.

5. எப்போது முள்ளதவ் வேகான்ம வத்துவே
யப்போதவ் வத்துவை யாதிகுரு — செப்பாது
செப்பித் தெரியுமா செய்தன ரேலெவர்
செப்பித் தெரிவிப்பர் செப்புகென — விப்போதவ்

ஏகான்ம வுண்மை யினைத்தெனத் தேற்றியன்பர்
தேகான்ம பாவஞ் சிதைவித்தான் — ஏகான்ம
ஞான சொரூபமா நண்ணுங் குருரமணன்
றானவின்ற விப்பாவிற் றான்.

— முருகனார்

ஸ்ரீ
அப்பளப் பாட்டு

மீண்டும் சாப்பிட வேண்டும் என்று ஆசை எழாதபடி ஆசையை தீர்த்துக்கட்டும் (ஆன்மாவான) அப்பளத்தை இட்டு, சாப்பிட்டுப் பாரு.

இந்த உலகில் கவலைப்பட்டுத் திரியாது, உண்மையைப் போதிக்கின்ற சத்குருவானவர் சொல்லாது சொன்ன ஒப்பு-உயர்வு இல்லாத (நான் யார் என்ற) ஓர் மொழியின்படி அப்பளம் இட்டு பாரு.

1. தன் சொரூபமல்லாத, பஞ்ச கோசங்களாலாகிய உடலில் வளரும் “நான்” என்னும் தானியமான உளுந்தை, விசாரம் என்னும் இயந்திரத்தால் “தேகம் நான் அல்ல” என்று உடைத்துப் பொடியாக்கி, அப்பளம் இட்டுப் பாரு.

ஸ்ரீ
அப்பளப்பாட்டு

பல்லவி

அப்பள மிட்டுப் பாரு — அத்தைச்
சாப்பிட்டுன் னாசையைத் தீரு.

அநுபல்லவி

இப்புவி தன்னி லேங்கித் திரியாமற்
சற்போ தசுக சற்குரு வானவர்
செப்பாது சொன்ன தத்துவ மாகிற
வொப்புயர் வில்லா வோர்மொழி யின்படி — (அப்)

சரணங்கள்

1. தானல்லா வைங்கோச கேஷத்ர மிதில்வளர்
தானென்னு மானமாந் தான்ய வுளுந்தை
நானாரென் ஞான விசாரத் திரிகையி
னானல்ல வென்றே யுடைத்துப் பொடித்து — (அப்)

2. ஜீவன் முக்தர்களின் சத்சங்கம் என்ற பிரண்டை ரசத்தைச் சேர்த்து மன அடக்கம், புலனடக்கம் என்ற (சமம்-தமம்) மிளகு, ஜீரகம் இட்டு, பற்றுதலை ஒழிக்கும் உபரதி என்னும் உப்பை இட்டு, சுபவாசனை வடிவான பெருங்காயத்தைச் சேர்த்து அப்பளம் இட்டுப் பாரு.

3. 'நான்-நான்' என்கிற உறுதியான கல்லில் கலக்கத்திற்கு இடந்தராது உள்முகப் பார்வை எனும் உலக்கையால் ஓயாமல் இடித்து, சாந்தமே வடிவான குழவி கொண்டு சமபாவமான பலகையில் சலிப்பு இல்லாமல் சந்தோஷமாக அப்பளம் இட்டுப் பாரு.

4. மௌன அடையாளம் காட்டும் பரவெளியாகும் முடிவில்லாப் பாத்திரத்தில் அஞ்ஞானத்தைச் சுட்டுப் பொசுக்கும் ஞான அக்னியால் காய்கின்ற சுத்த பிரம்ம வடிவான நல்ல நெய்யில், அப்பளத்தைப் பொரித்து, நான் அந்தப் பரப்பிரம்ம சொரூபமேயானவன் என்று எப்போதும் அப்பளத்தைப் பொரித்துத் தானே தானாக தன்மயமாகிய, அந்த அப்பளத்தைச் சாப்பிடுவாயாக.

2. சத்சங்க மாகும் பிரண்டை ரசத்தொடு
சமதம மாகின்ற ஜீரக மிளகுட
னுபரதி யாகுமவ் வுப்போ டுள்ளநல்
வாசனை யாம்பெருங் காயமுஞ் சேர்த்து — (அப்)

3. கன்னெஞ்சி னானா னென்று கலங்காம
லுண்முக வுலக்கையா லோயா திடித்து
சாந்தமாங் குழவியாற் சமமான பலகையிற்
சந்ததஞ் சலிப்பற சந்தோஷ மாகவே — (அப்)

4. மோனமுத் ரையாகு முடிவில்லாப் பாத்ரத்தில்
ஞானாக்னி யாற்காயு நற்பிரம்ம நெய்யதி
னானது வாகவே நாளும் பொரித்துத்
தானே தானாக புஜிக்கத் தன்மய — (அப்)

ஸ்ரீ
ஆத்ம வித்தை

மிகவுமே எளிமையானது, (தன்னை அறியும்) ஆத்ம வித்தை ஐயே! அது மிக எளிமையானது.

சாமானிய அறிவுடையவருக்கும், உள்ளங்கையில் உள்ள நெல்லிக் கனியும் பொய்யாகும்படி அதைவிட எளிதாய், கண்கண்ட உண்மையாக உள்ளது ஆன்ம சொரூபம். (எனவே, ஆன்ம வித்தை ஐயே! அதி சுலபம்!)

1. எப்போதும் நிரந்தரமாக உண்மைப் பொருளாகத் தான் இருந்தும்; பொய்யான உடலும், உலகமும் உண்மைபோல் தன்னில் இருந்து முளைத்து எழும். அந்தப் பொய்யான நினைவை ஒடுக்கிட, உண்மைப் பொருள் இதய வெளியில் தானே ஆன்மாவாக ஒளிவீசும். அஞ்ஞான இருள் அடங்கி, துன்பம் நீங்கி இன்பம் பெருகும். (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

2. மாமிச வடிவமாகிய இந்த 'உடலே நான்' எனும் எண்ணம், மற்ற பலவித எண்ணங்களாகிய மாலையில் கோர்க்கப்பட்ட நூலைப் போன்றது. ஆகையால் நான் யார்? அது உதிக்கும் இடம் எது? என்று உள்ளே விசாரித்தால் எண்ணங்கள் அழிந்துபோய் 'நான்-நான்' என்று இதயக் குகையில் தானாகத் திகழ்வது, ஆன்ம ஞானமாம் மோனம் ஆகும் என்று அறியலாம். அந்த இடமே ஞானாகாசமும் ஆனந்தத்தின் இருப்பிடமுமாகும். (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

ஸ்ரீ
ஆன்மவித்தை

பல்லவி

ஐயே! யதிசுலபம் — ஆன்மவித்தை
ஐயே! யதிசுலபம்.

அநுபல்லவி

நொய்யார் தமக்குமுளங் கையா மலகக்கனி
பொய்யா யொழியமிகு மெய்யா யுளதான்மா. (ஐயே)

சரணங்கள்

1. மெய்யாய் நிரந்தரந்தா னையா திருந்திடவும்
பொய்யா முடம்புலக மெய்யா முளைத்தெழும்பொய்
மையார் நினைவணுவு முய்யா தொடுக்கிடவே
மெய்யா ரிதயவெளி வெய்யோன் சுயமான்மா —
விளங்குமே; இரு ளடங்குமே; இட ரொடுங்குமே;
இன்பம் பொங்குமே. (ஐயே)

2. ஊனா ருடலிதுவே நானா மெனுநினைவே
நானா நினைவுகள்சே ரோர்நா ரெனுமதனா
னானா ரிடமெதென்றுட் போனா னினைவுகள்போய்
நானா னெனக்குகையுட் டானாய்த் திகழுமான்ம —
ஞானமே; இதுவே மோனமே; ஏக வானமே;
இன்பத் தானமே. (ஐயே)

3. தனது உண்மைச் சொரூபத்தை விட்டு, மற்றவற்றை அறிவதால் பயன் என்ன? தன் ஆத்ம சொரூபத்தை உணர்ந்துவிட்டால் பிறகு அறிவதற்கு என்ன இருக்கிறது? பலவித உயிரினங்களில் பிரியாது ஒன்றாய் விளங்கும் சொரூபத்தை உணர்ந்தால் அதுவே தன்னுள் விளங்கும் ஆன்ம பிரகாசம் என்பது விளங்கும். அதுவே அருள் விலாசம் ஆகும். அகந்தையை அழிக்கும், இன்பத்தின் மலர்ச்சியுமாகும். (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

4. கர்ம வினைகளின் கட்டு அவிழவும், பிறவிக்குக் காரணமாகிய அகந்தை அழியவும், அனைத்து வழிகளைவிட ஆத்ம விசார வழியே மிகவும் சுலபமானது. எண்ணம், சொல், செயலில் அமைதி ஏற்பட்டு சும்மா இருந்தால் ஆச்சரியமான வகையில் ஆன்ம ஜோதி பிரகாசிக்கிறது. அந்த நிலையில் பயமே இல்லை; என்றும் ஆத்மானுபவம் கிடைக்கிறது. அதுவே இன்பக் கடலாய்த் திகழ்கிறது. (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

5. ஆகாசம் முதலான வெளியை விளக்கிக் காட்டும் கண் முதலான பொறிகளுக்கும் கண்ணாகிய, மனமாகிய கண்ணிற்கும் கண்ணாகி அம்மனதிற்கும் மேலான சிதாகாசமாக; வேறு எதையும் எண்ணாது தன்னை உள்ளே நாடும் உள்ளத்தில் ஒளிர்கின்ற அண்ணாமலையைக் காணலாம். அதுவே என் ஆன்மா. அதன் அருளை வேண்டி, அதனிடம் அன்பு பூண்டு இன்பம் தோன்ற அது எப்போதும் விளங்குகிறது. (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

3. தன்னை யறிதலின்றிப் பின்னை யெதறிகிலென்
றன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய
பின்ன வுயிர்களில பின்ன விளக்கெனுமத்
தன்னைத் தனிலுணர மின்னுந் தனுளான்ம —
ப்ரகாசமே; அருள் விலாசமே; அக விநாசமே;
இன்ப விகாசமே. (ஐயே)

4. கன்மா திகட்டவிழ சென்மா திநட்டமெழ
வெம்மார்க் கமதனினு மிம்மார்க் கமிக்கெளிது
சொன்மா னததனுவின் கன்மா திசிறிதின்றிச்
சும்மா வமர்ந்திருக்க வம்மா வகத்திலான்ம —
சோதியே; நிதானு பூதியே; இராது பீதியே;
இன்பவம் போதியே. (ஐயே)

5. விண்ணா தியவிளக்குங் கண்ணா தியபொறிக்குங்
கண்ணா மனக்கணுக்குங் கண்ணாய் மனவிணுக்கும்
விண்ணா யொருபொருள்வே றெண்ணா திருந்தபடி
யுண்ணா டுளத்தொளிரு மண்ணா மலையெனான்மா —
காணுமே; அருளும் வேணுமே; அன்பு பூணுமே;
இன்பு தோணுமே. (ஐயே)

ஸ்ரீ
தேவிகாலோத்தர –
ஞானசார விசார படலம்

பிறவிகளில் (தேகங்களில்) சிறந்தது மானிடப் பிறவி; நோன்புகளில் சிறந்தது கொல்லாமை (பிற ஜீவர்களுக்குத் துன்பம் செய்யாதிருத்தல்); தெய்வங்களில் சிறந்தது கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமான்; தெரிந்து அறிய வேண்டிய நூல்களில் சிறந்தது தேவிகாலோத்தரமே.

பரமசிவன் தனது திருவாக்கால், பார்வதி தேவியின் செவிகளில் புகட்டியருளிய, இந்தத் தேவிகாலோத்தரமென்ற ஞான மார்க்கத்தில் நடந்து, அதில் தேர்ந்தவர்களின் மகத்தான விளைவால் பிரகாசிக்கும், ஆனந்தமய அம்ருதமான அருள்நிறைந்த அத்துவித மௌனமாகிய, சர்வசாட்சிரூபமான யானைமுகனைத் தியானிப்போம்.

1. ஸ்ரீ பார்வதி தேவி: பரமேச்வரா! சகல உயிர்களும் எதனையறிந்தால் முக்தியை அடைவதற்கான வழியைக் காணலாகுமோ, அத்தகைய ஞானத்தையும் ஆசாரத்தையும், அறிய விருப்பமுள்ள எனக்கு, அவற்றைக் கருணைகூர்ந்து சொல்லியருள்வீராக என்று வேண்டினாள்.

II. அநுவாத நூன்மாலை

ஸ்ரீ
தேவிகாலோத்தர –
ஞானாசார விசார படலம்

(வேறு)

அரிய வாக்கையின் மானிட வாக்கையே யாக்கை
விரியு நோன்பினி லுயிர்கொலா விரதமே விரதங்
கருதிற் றெய்வதங் கண்ணுதற் றெய்வமே தெய்வந்
தெரியிற் றேவிகா லோத்தரத் தேற்றமே தேற்றம்.

— கண்ணுடைய வள்ளலார்

நூல்

(கலிவெண்பா)

தேவன் றிருவாயாற் றேவி செவிபுகட்டுந்
தேவிகா லோத்தரந் தேர்ஞான — மாவிளைவா
மானந்த வானமுத மானவரு ளத்துவித
மோனக் கரியகமே முன்னம்மை — தானும்

தேவி:

1. *அனைவர்க்கு மேமுத்திக் காகவம் முத்தி*
தனையுறுமார்க் கக்காட்சி தானா — மனையபர
ஞானமா சாரமே நாடுமெனக் குன்னருளால்
வானவ ரீசா வழுத்தென்ன — ஞானசிவன்

2. ஞான சொரூபனான பரமேச்வரன்: மாதர்களுக்கு அரசியே! எந்தச் சாதனையை அனுஷ்டிப்பதனால், விவேகிகள், யாதொரு குற்றமற்ற, சொல்லுதற்கு அரிய முக்தியடைவார்களோ, அத்தகைய ஞானமார்க்கத்தையும் ஆசாரங்களையும், அனைவரும் ஞானமடையும் பொருட்டு, நான் உனக்கு இன்று நன்றாகச் சொல்லுகிறேன். கேட்பாயாக!

3. நல்ல முகத் தோற்றமுடைய பார்வதியே! உத்தம அதிகாரிகளுக்கு உபதேசிக்கக் கூடிய குறைவில்லாத இந்தக் காலோத்தர ஞானத்தினால், எவர்களுக்கு முக்திக்கு வித்தாகிய அபரோட்ச ஞானம் உள்ளத்தில் உதிக்காதோ, அப்படிப்பட்டவர்கள் வானம் போன்று விரிந்த, கணக்கிலடங்காத சாஸ்திரங்களைக் கற்றாலும், அவர்களுக்குச் சொரூப ஞானம் உதிக்காதென்றே உணர். இது நிச்சயம்.

4. ஆகையால் சாதகனானவன் பீதியற்று, முக்தி கிடைக்குமென்ற உறுதியுடன், சந்தேகப்படாமல், இச்சையற்று, உள்ளத்தில் சிரத்தையுடையவனாய், மனதில் குழப்பம் அற்று, ஞானத்தில் உற்சாகமுடையவனாய்,

5. எனது என்கிற மமகாரம் அற்று, ஜீவகாருண்ணியம் நிறைந்து, எல்லா உயிர்களுக்கும் அபயம் தந்து, முக்தியில் தீவிர இச்சையுள்ளவனாய், யோகத்தில் மனம் ஒன்றியவனாய், இத்தேவிகாலோத்தர மார்க்கமொன்றிலேயே மனம் இசைந்து நிற்பானாக.

(6-7 குளகம்)

சூறைக் காற்றுக்குச் சமானமான மனதை வெளிப்போக விடாது, எவனொருவன் வலித்து இழுத்துக் கட்டுப்படுத்தி, சலனமற்ற நிலையில் வைக்கிறானோ, அவனது மகிமையைக் கூறவும் இயலுமோ! அவனே சதுர்முகப் பிரம்மாவும், பரமசிவனும், மகாவிஷ்ணுவும், தேவர்களின் அதிபதியாகிய இந்திரனும், சுப்பிரமணியனும் ஆவன்.

ஈசன்:

2. *யாதினான் ஞானியர்கள் யாதோர் களங்கமுமி*
லோதரிய முத்திதனை யுற்றிடுவார் — மாதரசே
ஞானவா சாரங்க ணானுனக் கின்றுரைப்பன்
ஞானமுற யாவருமே நன்கிந்த — வூனமறு

3. *ஞானந்தான் யாவர்க்கு நன்முகத்தோ யிக்கால*
ஞானத்தா லுள்ளி னணுகாதோ — வான
கணக்கிலாக் கோடிநூல் கற்றாலு மன்னோர்க்
குணர்வுதியா தென்றே யுணர்வாய் — துணிவீ(து)

4. *அதனாலே நிர்ப்பயனா யையமென லின்றி*
யெதனிலுமே யிச்சை யிலனா — யிதயத்தி
னற்சிரத்தை யோடு நிராகுலனாய் ஞானத்தி
லுற்சாக முள்ளோனா யுற்றெனதென் — பற்றாம்

5. *மமதையின் றிக்கருணை மன்னிப்பூ தங்க*
டமக்கெல்லா மேயபயந் தந்து — முமுட்சுவா
யோகத்திற் றற்பரனா யோதிக்கா லோத்தரத்தி
னேகவழி நிற்க விசைந்துபுறம் — போகா

6. *அவன்றானே நான்முகனு மச்சிவனு மாலு*
மவன்றேவர் கோன்குகனு மாவ — னவன்றா
னகில சுரர்குருவு மாவன்மா யோகி
யகில தபோதனனு மாமே — யகிலமுணர்

அவனே சகல தேவர்களின் குருவாகிய பிருகஸ்பதியும், மகாயோகியும், எல்லாத் தவங்களையும் செய்து, அவைகளில் சித்திபெற்ற தபோதனனும், உலகம் போற்றும் மகா பண்டிதனும், புருஷசிரேஷ்டனும், உண்மை ஞானத்தைப் பெற்றவனும் ஆவான்.

(8-9 குளகம்)

தூய மனமுடையவளே! காற்றைவிட அதிவேகமாகச் சலிக்கும் தன்மையுள்ள மனமானது, எதனால் ஸ்திரமாக நிலை நிறுத்தப் படுமோ, அதுவே முக்தியை அடைவதற்கான வழி. சத்வஸ்துவை நாடும் உபாயமுடைய சதுபாயர் சார்வதற்கான நல்ல குணமுமாகும். அதுவே நல்ல பிரக்ஞையும் ஸ்திரத் தன்மையுமாகும். பின்னும் அதுவே விவேவிகளின் ஸ்வதர்மமுமாகும்.

புண்ணிய தீர்த்த யாத்திரையும், உத்தமமான தானமும் நல்ல தபசும் அதுவேயாகும். இதில் சந்தேகமில்லை என்று அறிவாயாக.

10. ஆராயும்போது, மனமானது எவ்விதத்திலும் சிறிதேனும் சலிக்குமேயானால் அதுவே சம்சாரமாகிறது. சலிக்காமல் நிற்குமானால் அதுவே முக்தியாகும். இது மறுக்க முடியாத உண்மையாகும். ஆகையினால் விவேகி, மனதை எப்போதும் பரவஸ்துவைப் பற்றி மேலான பிரக்ஞையினால், உறுதிப்படுத்தி ஸ்திரமாக்க வேண்டும் என்பதை அறிவாயாக.

11. ஒன்றாக ஒடுங்கின அந்த ஏகாந்தரத்தில் அடைகின்ற சுகமே அழிவற்ற ஆனந்தமாகும். அங்கு எந்த கருமங்களும் இல்லை. அந்த பரவஸ்துவில் பரவித்தையை கற்றுத் தேர்ந்த எவன்தான், அதில் தோய்ந்து ரமிக்காமல் இருப்பான் நீயே சொல்.

7. பண்டிதனு மாபுருடன் பாரமார்த் தப்பேறு
கொண்டவனு மன்னவனே கூறுங்கான் — மண்டியுழல்
வாயுசமஞ் சித்தம் வலித்தெவனா னிச்சலன
மாயிருத்தப் பெற்றிடு மாஞ்சித்தந் — தூயோய்

8. அதுதானே முத்திக் குபாய மதுவே
சதுபாயர் சார்குணந் தானு — மதுவே
பிரஞ்ஞை திரத்தன்மை பின்னு மதுவே
தருமம் விவேகியர்க்குத் தான்மற் — றரிதாம்

9. அதுவேநற் றீர்த்த மதுவேயாந் தான
மதுவே தவமாகு மைய — மிதிலில்லை
யெவ்வுபா யத்தினா லேவாயு விற்சலன
விவ்வுளங்கட் டப்படுமோ வெண்ணுங்கா — லெவ்விதமும்

10. சித்தஞ் சிறிதசையச் சம்சார நிச்சலமாச்
சித்தநிலை நிற்கமுத்தி சித்தமிது — சித்தந்
திரமாக்க வேவேண்டு மாதலினாற் றீமான்
பரமாம் பிரஞ்ஞையினாற் பாரஃ — தொருமையுறும்

11. அந்தவே காந்தத் தடையுஞ் சுகமதுவே
யந்தமிலா வத்தியந்த வானந்த — மெந்தக்
கருமமுமி லப்பரத்திற் கற்றவனா மார்தா
னிரமித் திடானீ யிசைப்பாய் — பிரிவாம்

12. அன்னியமாகவுள்ள விஷயங்களை அறியக்கூடிய ஞானம் போய், எங்கும் வியாபகமாயுள்ள, உருவமற்றதான நிர்விஷய ஞானத்தை அடைந்த சிரேஷ்டனானவன், மோக்ஷத்தை அடைய விருப்பமும் இல்லாது இருப்பினும், அந்த தீரன், அழிவற்றதான மோக்ஷ வீட்டை தவறாமல் தானாகவே அடைந்திடுவான்.

13. அம்பிகையே! இருக்கின்றே னென்னும் ஒரே அம்சத்துடன் கூடிய சைதன்ய சொரூபம் சக்தியெனப்படும். அந்த சக்தியினால்தான் இந்த உலகமெல்லாம் பிரகாசிக்கிறது. சர்வ பிரபஞ்சமும் சக்தியின் அம்சமாகிய மனமேயாகும். அது சகல பற்றுக்களும் அற்று நிற்பதுதான், நிஷ்கள ஞானமாகும். அந்த ஞானமே ஆத்மாவாகும்.

14. அன்னியமாய்த் தோன்றும் சகலமுமற்று ஏக சொரூபமாய், ஞானப் பிரகாச மாத்திரமாய், காணக்கூடிய காட்சிகள் அற்றதாய், நானென்னும் உணர்வாகிய ஒரே அம்சத்துடன் கூடிய, சூனியநிலை எதுவோ, அதுவே பரம் பொருளுடன் சேர்க்கக்கூடிய, உய்யக்கூடிய, மோட்சத்தை தரக்கூடிய வித்தையாகச் சொல்லப்படுகிறது.

15. இருப்புணர்வாய் நிற்க விரும்பாது, நேர்வழியாகிய காலோத்தர ஞானமார்க்கத்தை விட்டு சக்கரங்கள், நாடிகள், சக்கரங்களின் தாமரைகளில் வீற்றிருக்கும் தேவதைகள், அவற்றிற்கான மந்திர அட்சரங்கள், சூரிய, சந்திர, அக்னி மண்டலங்களின் பலவித மூர்த்தி பேதங்கள் இவற்றை ஒருநாளும் கொஞ்சமும் நினையாதே.

16. பிராண சலனத்தை நிறுத்தும் பலவிதமான மந்திரங்கள், உயிரின் சலனத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் கும்பகம், தாரணை முதலானவைகள் அத்தனையும், அழிவற்ற முக்தியை அடைய விருப்பமுள்ளவர்கள் அனுஷ்டிக்கத் தேவையில்லை.

12. விடயஞா னம்போய் விரிநிட் களமாய்
விடயமில் ஞானபரன் வீடு — மடைய
வவாவிலனே னுந்தீர னட்சயமா மோட்சந்
தவாதுற் றிடுவனே தானே — சிவையே

13. இருக்கின்றே னென்கலையோ டேய்ந்தசை தன்ய
வுருசத்தி யஃதா லொளிரும் — பிரபஞ்சஞ்
சர்வஞ்சத் தித்யானஞ் சார்நிட் களஞானஞ்
சர்வ நிராலம்பந் தானயலாச் — சர்வமிலா

14. அத்துவித மாகி யறிவொளி மாத்திரமா
யெத்து மகமமிசத் தெச்சூன்ய — முத்திக்கு
வித்ததுவே யென்று விளம்பும் பரயோகத்
துய்த்திடுவ தாகத்தா னுற்றகத்தை — நத்தாது

15. சக்கரங்க ணாடிகள் சார்பதும தேவதை
யக்கரங்கண் மண்டலமூர்த் தாதியா — மிக்கவிவை
யோர்போது மற்பமுமே யுன்னி யிடத்தகா
நேர்மார்க்க மாமிதனை நீத்துயிரி — னோர்யாப்பாம்

16. கும்பகமு மந்திரக் கூட்ட முயிர்ச்சலனத்
தம்பனமுன் னாயவாந் தாரணைதா — மென்பவைக
ளத்தனையு மாசரிக்க வேண்டாவா மட்சயமா
முத்தியிச்சை யுள்ளோர் முயன்றென்றுஞ் — சித்தமதால்

17. கவனத்துடன் கேட்பாய்! பரவஸ்துவானது, ஞானத்தினால் மட்டுமே அறியத்தகுந்தது. ஆகையினால் கொஞ்சமும் தனக்கன்னியமாக அந்தப் பரவஸ்துவை அறிய வேண்டியது இல்லை. மனதால் செய்யப்படும் பூஜை, புனிதமான ஜெபம் தேவாதா மூர்த்திகளைத் தியானிப்பது முதலான எதுவுமே தேவையில்லை.

18. சலனத்தையடைந்து பகிர்முக விஷயங்களைப் பற்றும் மனமுடையவர்களுக்கு, பந்தத்தை ஏற்படுத்துவதற்கான காரணங்கள், எப்பொழுதும் உண்டாகிக் கொண்டேயிருக்கும். அவர்கள் வெளிமுகமாகத் திரியும் மனத்தை உள்முகமாக்கி, தனதியல்பான உண்மை நிலையில் நிற்கச் செய்தால், எந்தவிதமான துன்பமும் அடையமாட்டார்கள் என்பதை உணர்வாய்.

19. மலமற்ற தூய சொரூபமானது உள், வெளி, மேல், கீழ், நடு என்ற திக்குகள் ஒரு சிறிதும் இல்லாததால், எல்லா உருவங்களுமாய், தனக்கென ஒருவிதமான உருவமும் அற்றதாய், தன்னாலேயே தன்னை அறியக்கூடியதாய், சுயம்பிரகாசமாய் விளங்குகிறது. அப்படிப்பட்ட அந்த உண்மையான சொரூபத்தைச் சேர்வாயாக.

20. ஜீவர்கள், ஒன்றிய மனத்துடன் எந்தெந்த கதியினை அடைய வேண்டுமென்ற நோக்கத்துடன், தொழில்களைச் செய்கிறார்களோ அதன்படி அந்தந்தக் கதிகளை அடைகிறார்கள். ஆதலால் குற்றம் நீங்காத அந்தத் தொழில்களைச் செய்யாமல், புறவிஷயங்களில் லட்சியத்தை வைக்காமல், மனதை உள்முகமாக்கி, பார்வைக்கு எட்டாத சொரூபத்தையே தியானிப்பாயாக.

21. உள்ள பொருள் ஏகமே, ஆதலால் அதற்கு சுபாவஸ்திதியில் எதுவுமேயில்லை. வேத சாஸ்திரங்களில் கர்மங்களோ அதன் பலன்களோ இருப்பதாகச் சொல்லப்படும் இவையாவும் உண்மையல்ல. பேதங்களுடன் காணப்படும் உலகமும் இல்லை. பிரபஞ்சத்தில் உலகப்பற்றுள்ள ஜீவனும் இல்லை.

17. பூசை வணக்கம் புரிசெபஞ் சிந்தன
மாசரிப்ப தேதுமே யங்கில்லை — பேசுமது
கேவலம் ஞேயமென்று கேளினிக் கிஞ்சிலன்ய
மாவறிய வேண்டுவதின் றாஞ்சலன — மேவி

18. வெளிவிடயம் பற்றும் விரிமனத்தார்க் கென்றும்
விளையும் வெகுபந்த வேது — வெளியே
திரியுஞ்சித் தத்தைத் திருப்பநிலை யுற்றே
யொருதுனிமே வாருலகி லோர்வாய் — நிருமலமாய்

19. உள்வெளிமேல் கீழ்நடுதிக் கோர்சிறிது மின்றியே
யுள்ளவுரு வெல்லாமா யோருருவு — மில்லதாய்த்
தான்றனக்கே வேத்தியமாய்த் தானே யிலங்கிடுமாற்
பூன்றமா மொன்று புணர்ந்திடுக — வூன்றிமனம்

20. எவ்வெதன் றிட்டியா லெவ்வுயிர்செய் யுந்தொழில்க
ளவ்வுயிர்க் கக்கதியுண் டாதலா — லெவ்வ
மறாவவை சாரா தயற்றிட்டி யற்று
ணிராலோகந் தானே நினைவா — யொரேமெய்யால்

21. ஏது பலங்கரும மில்லை சுபாவத்தி
லோது மிவையாவு முண்மையல — பேத
வுலகமு மில்லை யுலகப்பற் றுள்ள
விலவுகிகன் றானு மிலையே — நிலவு

22. உலகமும், தனக்கொரு பற்றுக் கோடில்லாத அந்தப் பரவஸ்துவேயாகும். பற்றுக் கோடற்ற பரவஸ்துவினாலேயே என்றுமுள்ள உலகம் பிரகாசிக்கிறது. ஆகையினால் ஞானியானவன் மனதை அந்தர்முகப்படுத்தி, இந்த உலகிலுள்ள அனைத்துப் பொருள்களையும், அந்தப் பரம்பொருளின் மயமாகவே செய்து, தானும் பரவஸ்துவின் மயமாகவே ஆகிவிடுவான் என்று அறிவாய்.

23. உருவமற்ற, ஏக சிதாகாச சொரூப வடிவமாக, எங்கும் நிறைந்துள்ள சூன்யத்தை எவனொருவன் பாவிக்க மாட்டானோ, அவன் எக்காலத்தும் தன்னைத் தானே பந்தப்படுத்திக் கொள்ளும், பட்டுப் புழுவைப்போல உலகப்பற்றுள்ள சம்சாரியாவான்.

24. எண்பத்து நான்கு லக்ஷவிதமான சிருஷ்டிகளின் உற்பத்தியாகின்ற அனைத்து ஜீவகோடிகளுக்கும், இந்த உலகத்தில் மேலும் மேலும் மிகுந்த துக்கமே உண்டாகிக் கொண்டிருக்கிறது. அந்தத் துன்பமும் துயரமும் நீங்க வேண்டுமானால், மகத்தாகிய அந்தச் சூன்யத்தைக் கொஞ்சமும் இடைவிடாமல் சிந்தனை செய்வாய்.

25. துன்பமற்ற ஆன்மஞான சாட்சாத்காரம் மனதில் உதிப்பதன் பொருட்டே, நல்ல செய்கைகளையும், நல்ல ஒழுக்கத்துடன் இருக்கும்படியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், ஞான அபேட்சையுள்ள நீ மூர்த்தி தியானம், சாலம்பயோகம் என்பவைகளை நீக்கிவிட்டு நிஷ்பிரபஞ்சமாகிய சொரூப நிலையில் நிலைத்திருப்பாய்.

26. திடமாகக் கீழாகவுள்ள பாதளத்திலிருந்து, மேலாகவுள்ள சக்தி பரியந்தம், ஒன்றினுக்கு ஒன்று ஆதாரமாகவுள்ள தத்துவங்களனைத்தும், யாராலே சூன்ய **பா**வமாகிய அஸ்திரத்தைக் கொண்டு வீழ்ச்சியடையுமோ, அவரே சூரர். அந்தச் சூரரே சூனிய ஞானிகளென்று சொல்லப்படுபவர்கள்.

22. நிராலம்ப மிந்த நிகிலமு மன்றி
நிராலம்பத் தாலொளிரா நிற்ப — நிராலம்ப
மாகச்செய் திந்த வனைத்து நிராலம்ப
மாகிடுவ னென்றே யறியுருவற் — றேக

23. வியோமவடி வாகும் வியாபகமா சூன்ய
மியாதொருவன் பாவித் திடானே — லியாண்டுமவன்
பீசகோ சக்கிருமி போலப் பிரபஞ்ச
பாசசமு சாரியாம் பார்நான்காப் — பேசும்

24. அகிலமாம் யோனியிலு மாருயிர்யா விற்கு
மிகக்கிலே சம்பொருந்து மேன்மே — லகிலக்
கிலேசமுமே நீக்குதற்குக் கேண்மாசூன் யத்தை
யிலேசமறாச் சிந்தை யியற்று — கிலேசமின்மெய்ஞ்

25. ஞானவுத யப்பொருட்டே நற்கிரியை சற்சரியை
தானவிலப் பட்டதாற் றானொன்றை — மானதத்தி
னுட்கருதுஞ் சாலம்ப யோகந் தனையுமொரீ
நிட்பிரபஞ் சத்தே நிலைநிற்பாய் — திட்பமாம்

26. பாதலமுன் பாகப் பகர்சத்தி யந்தமா
யாதரப் பட்டவிவை யத்தனையும் — வீதலுறுஞ்
சூனியமா மத்திரங்கொண் டாராலே சூரரவர்
சூனிய ஞானியராச் சுட்டுறுவோ — ரீன

27. ஒருவன் கீழான விஷய போகங்களில் மனதைச் செலுத்தாமல், குரங்கைப் போல் சதா சலித்துக் கொண்டிருக்கும் மனதை உள்முகமாகத் திருப்பி, சர்வ சூனியமாகிய பதத்தில் நிலைபெறச் செய்திடுவான். அப்படி ஸ்தாபிக்கச் செய்வதால், அவன் நேராக முக்தி பதத்தை அடைவான்.

28. அனைத்தும் கடந்து சிருஷ்டியிலுள்ள சகல தத்துவங்களிலும் வேறாகயில்லாமல், தேகமே நான் என்ற பாவத்திற்கு அன்னியமாய், நான் என்னும் சொல்லின் உன்மைப் பொருளுக்கு அனன்யமாய்ப் பிரகாசிக்கும், பரிபூரண சித்சொரூப ஞானமே, எங்கும் வியாபித்துள்ள மேலான பொருளாகும்.

29. என் அன்புக்குரியவளே! ஆஹா! இது என்ன அதிசயம் பார்! கண்களுக்குப் புலப்படும் ஆகாசத்தைப் போல, அகில புவனங்களின் உள்ளேயும், வெளியேயும், ஒரே சொரூபமாய் வியாபித்து உருவமற்றதாய் பரமானந்தவஸ்து விளங்குகிறது. அப்படிப்பட்ட ஆனந்தமய வஸ்துவினுள்ளே ஆழப்படிந்தவர், அப் பரமானந்த வடிவமேயாவர்.

30. விறகினைச் சார்ந்திருக்கின்ற நெருப்பானது, விறகில்லாவிடில் எப்படித் தானே அணைந்துவிடுமோ அதைப்போன்றே, பற்றுவதற்குரிய விஷயங்கள் இல்லாமல் போனால் பலவற்றை நினைந்து அலையும் மனமும், தானே ஓய்ந்து சாந்தியை அடைந்துவிடும்.

31. பற்றுக்களை உண்டாக்குகின்ற பொருட்களால் மோகமடைதல், அதன் வேட்கையால் மயங்குதல், ஏமாற்ற அதிர்ச்சியினால் மூர்ச்சையடைதல், சொப்பனம் ஆகிய நான்குவித அவஸ்தைகளையும், தூக்கத்தையும், விழிப்பு நிலையும், வேறு வேறாக கூறப்படும் இந்த எல்லா அவஸ்தைகளையும், ஒழித்துவிட வேண்டுமென்று உணர்வாயாக.

32. ஸ்தூலமாகவுள்ள தேகத்தில் சூட்சுமமாக வந்து சேர்ந்திருக்கின்ற, பிராணன், மனம், புத்தி, அகங்காரமாகிய இவையாவிற்கும் ஏகமான சித்சொரூபமானது அன்னியமேயென்று தியானம் புரிவதால் அந்த சித்சொரூபத்தையடைந்து, அதிலேயே நிலை பெறலாமென்று உணர்வாய்.

27. விடயத்தி லாசை விடாதே குரங்கை
விடச்சலிசித் தத்தை விடாது — மடக்கிச்
சருவசூன் யப்பதத்திற் றாபிக்க வஃதா
னிருவாண முற்றிடுவ னேரே — பரமாய்

28. அகிலதத்து வத்து மபின்னமா யாக
மகமென் பதற்கனிய மாகி — யகமெய்ப்
பொருளுக் கபின்னமாம் பூரணசித் தெங்கும்
பொருந்துமுக முள்ள பொருடான் — றெரியுமஃ(து)

29. ஆகாயம் போல வகிலத் தகம்புறமு
மேகாங்க மாயுருவ மின்றியதா — மாகா
பரமானந் தத்துட் படிந்தவரன் பேயப்
பரமானந் தப்படிவர் பாராய் — சருவலுறும்

30. இந்தனமில் லாவெரிதா னெவ்வண்ணந் தான்றானே
மந்தமாய்ச் சாந்தியினை மன்னுமோ — வந்தவிதம்
பற்றுபொரு ளற்றாற் பரந்தமன முஞ்சாந்தி
யுற்றுவிடுந் தானாக வோய்ந்ததனாற் — பற்றலுறும்

31. மோகிகை மாயையே மூர்ச்சிகை சொப்பன
மாகிய விந்நான் கவத்தைகளு — மேக
சுழுத்தியொடு சாக்கிரஞ் சொல்லுமிவை யெல்லா
மொழித்துவிட வேண்டு முணர்வா — யழுத்தமாம்

32. தேகமிதிற் சூக்குமமாச் சேருமுயிர் சித்தபுத்தி
யாகுமகங் காரமிவை யாவுக்கு — மேகசித்
தன்னியமே யென்றுசிந்தை யாற்றவே யச்சித்தை
மன்னிடுவா னென்று மதித்திடுநீ — பின்னமாம்

33. தூக்கத்தினாலும், எண்ணங்கள், முதலியவற்றாலும் பிளவுபட்ட மனமானது, மூடத்தனம் அடைகிறது. இவ்வாறு இழிந்த மனத்தை சுயமுயற்சியுடன் தன் நிலையில் நிலைபெறச் செய்திடுவாய். விடாமுயற்சியுடன் அந்த நிலையிலேயே மனதை வைத்திடுவாய்.

34. மனமானது சித் சொரூபமாக, எப்பொழுது ஸ்திரத்தன்மை அடையுமோ, அப்பொழுது அந்த மனதை எந்த விதத்திலும் சலனமுறும்படி செய்யாதே! வேறெதையும் சிந்திக்க வேண்டியதில்லை. சித்தத்தை உற்பத்தி ஸ்தானத்திலேயே கட்டுப்படுத்தி, சலிக்காமல் இருக்கும்படி செய்வாயாக.

35. பந்தப்படுத்தும் விஷயப்பற்றை பற்றிக் கொள்கின்ற மனதை, வெளிமுக பற்றுகளே இல்லாமல் செய்திடுவாய். தனக்கன்னியமான ஆசிரயத்தை பற்றிக் கொள்ளும் மனத்தை நிச்சலமாகச் செய்து கொஞ்சமும் சலிக்கச் செய்யாது சாந்தி நிலையை அடைவாயாக.

36. லயமடையும் காலத்திலும் அந்தந்த பூதங்களில் உள்ள அந்தந்த ஆகாசம், மாசுபடாமல் இருப்பதுபோல, எண்ணற்ற நாமரூப ஜீவர்களில் வியாபித்திருந்தும் அவற்றின் எந்த குற்றமும் பற்றாத் தன்மையால், ஒப்பற்று விளங்கும் பர சொரூபமாகிய தன்னை இடைவிடாமல் தியானம் புரிவாய்.

37. சதா சலித்துக் கொண்டிருக்கும் காற்றுக்கு சமானமான மனதை, சலிக்கவிடாமல் நிற்கும்படி செய்யும் சாதனம் எதுவோ, (பரசொரூப தியானமே) பிறவி எடுத்ததின் பயனாகும். அதுவே கல்வித் திறமுமாகும்.

33. நித்திரையி னாலு நினைவாதி யாலுநிதஞ்
சித்தந்தான் மூடமிகச் சீரழியுஞ் — சித்தமிதை
யெத்தனத்தா லேயுணர்த்தி யேகாமற் றன்னிலையில்
வைத்திடுவாய் மேன்மேலும் வையதனாற் — சித்துருவாய்ச்

34. சித்தமெப் போது திரமாகு மெவ்விதத்து
மத்தைச் சலிப்பித்த லாகாதே — யித்தனையுஞ்
சிந்திக்க வேண்டுவதின் றாங்கேயச் சித்தத்தைப்
பந்தித்து நிச்சலமே பண்ணுவாய் — பந்திக்கும்

35. ஆசிரயம் பற்றியதா மச்சித்த மங்ஙனமே
யாசிரய மின்றியதா யாக்கிடுக — வாசிரயம்
பற்றுசல நிச்சலமாப் பண்ணியந் நிச்சலத்தைச்
சற்றுஞ் சலிப்பியா தைசாந்தி — யுற்றதனால்

36. இவ்வெல்லாப் பூத விலயமுண் டாகிலிவற்
றெவ்வெவ்விண் ணும்விமல மேபோல — வவ்வவ்
வுருவம் வியாபித்து மோர்மலமி றன்னைப்
பொருவி றியானம் புரிவாய் — மருவும்

37. அதுவே சனன மடைந்ததன் பேறா
மதுதானே பாண்டித்ய மாகு — மெதுதான்
சலனமுறும் வாயு சமஞ்சித்த மென்றுஞ்
சலனமறச் செய்சா தனந்தன் — னிலநீத்துச்

38. மனதை அதற்குரிய இடம்விட்டு, மேலேயும், மத்தியிலும், கீழேயும் மற்றெந்த ஸ்தானங்களிலும் தாரணை செய்ய (நிலை நிறுத்த) வேண்டாம். அந்தரங்கத்தில் செய்யும் பவானையைவிட்டு, வெளியேயும் எதையும் பற்றிக் கொள்வதற்கு இடந்தராமல், எப்பொழுதும் பற்றற்ற நிலையைப் பழகுவாய்.

39. மூடத்துவம் நிறைந்த தூக்கத்திலிருந்து மனதை எழுப்பி, விழித்திருக்கும்படி செய்திடுக. விழிப்பு நிலைக்கு வந்தவுடன், மனம் சலனம் அடையுமானால் அதை ஒடுக்கு. இப்படி தூக்கம், சலனம் ஆகிய இரண்டுமற்ற நிலையடைந்து, உண்மை நிலையாகிய இதனில் சலிக்காமல் நின்றிடுவாய்.

40. வேறு பற்றுக்கோடற்று, தங்குவதற்கு வேறு இடமின்றி, தன்னிடமுள்ள குற்றமெல்லாம் நாசமாகும்படி, எல்லாவித பற்றுகளும் நீங்கி, ஆசாபாசங்களை அடையாமலிருப்பதே, ஞானத்தினாலடையக் கூடிய முக்தி லட்சணம் ஆகும். இதை மனதில் உறுதியாக வைத்திடுவாய்.

41. தனக்கு அன்னியமாக உள்ள சகல பற்றுக்களையும் நீக்கி, மனதை இதயத்தில் பதியும்படி ஊன்றி நிறுத்தினால், அப்பொழுது எந்த அறிவானது விளங்குகிறதோ, அந்த அறிவை வலிமை அடையும்படி இடையறாமல் அப்பியாசம் செய்வாயாக.

42. பழகும் லக்ஷியத்தில் சோர்வடையாது, அந்த பரம்பொருளாகிய சூனிய வஸ்துவை, யாரொருவர் தியானித்து, அதிலேயே ஒன்றிடுவரோ அவர் ஜனன மரணமில்லாத, பெருமை மிகுந்த முக்தி நிலையை அடைந்தே தீருவர் என்பதை அறிந்திடுவாய்.

43. சிறப்பான தேவர்களை வணங்குவதும், தேவியரை வழிபடுவதும், வேறு வேறாக கூறப்படும் பாவமும், புண்ணியமும் அவற்றின் பலன்களும், இந்தப் பலன்களை ஆசிரயத்திருக்கின்ற விஷயங்களும், விஷய ஞானமும் ஆகிய இவை அனைத்தும் மிகப்பெரிய சம்சார பந்தமாகும்.

38. சித்தத்தை மேலேயுந் தாரணஞ் செய்யற்க
மத்தியிலுங் கீழிலு மற்றெங்குஞ் — சித்தமீ
தந்தரங்க பாவனைவிட் டாசிரய மின்றியதாச்
சந்ததமுஞ் செய்திடவே தானதனை — மந்த

39. உறக்கத்தி னின்று முணர்த்திடுக சித்த
முறிற்சலனம் பின்ன ரொடுக்கா — யுறக்க
மலைவென்னு மிவ்விரண்டு மற்றநிலை யுற்றா
னிலையிதனி னிச்சலமா நில்லாய் — வலையாம்வேற்(று)

40. ஆசிரய மின்றியதா யச்சித்தந் தானென்று
மாசறவா லம்பமெலா மற்றதாய்ப் — பாச
மனவவத்தை மன்னிடா மைஞேய முத்தி
தனதிலக்க ணந்தான் றரியாய் — தனக்கயலாம்

41. ஆலம்ப மெல்லா மறவிட்டே யம்மனத்தை
யேலத் தரிப்பித் திதயத்தே — சாலத்
துலக்கமா யெவ்வறிவு தோன்றுமோ வஃது
பலக்கவே யென்றும் பழகவ் — விலக்கயரா(து)

42. அப்பரமாஞ் சூனியத்தை யார்தியா னித்தேயவ்
வப்யாச தற்பரரா யாவரோ — தப்பார்
பிறப்பிறப்பில் லாத பெருமையுறுந் தான
முறப்பெறுவ ரேயவரென் றோர்வாய் — சிறப்பாரும்

43. தேவருந் தேவியரு மங்ஙனமே யன்னியமாம்
பாவமற முந்தற் பலன்களு — மேவியிடு
மாசிரய மாசிரய ஞானமுமே யானவிவை
மாசமு சாரபந்த மாலாகும் — பாசமாம்

44. பாசம் என்னும் ஆசிரயங்களாக இருப்பவையெல்லாமே, தொந்தங்களென்று (இரட்டைகளாக) சொல்லப்படுகின்றன. அவற்றை விட்டால் பரவஸ்துவானது தோன்றும். அந்தத் தொந்தங்களை விட்ட மகாயோகி பந்தமற்ற ஜீவன் முக்தனாவான். சரீரத்திலிருந்து விடுதலையடையும்போது, அவன் விதேகமுக்தன் ஆவான்.

45. பிராரப்த வினையால் வந்த இந்த சரீரத்தை வெறுப்பினால் ஒழித்துவிட எண்ணுவது அறிவுடையோர் செய்யக் கூடியதன்று. சரீரத்தை உலகத்தில் பிறப்பித்த பிராரப்த வினையானது தீர்ந்தவுடன், இந்த தேகமாகிய சுமை தானாகவே நீங்கிவிடும்.

46. உடலுள் இருக்கும் இதயத்தாமரையில் நான் என்று எந்த ஒரு சித்சொரூபம் பிரகாசிக்கிறதோ அந்த வஸ்துவானது நிர்மலமாயும் நிச்சலமாயுமுள்ளதாகும். அதனிடம் உதித்து ஒடுங்குவதான அகங்காரத்தை நீக்குதலால், அந்த சித்சொரூபமே முக்தி சுகத்தைத் தரும் என்று தெளிவாய்.

47. உள்ளத்தில் வந்து சேர்கின்ற எந்த உபாதியையும் சார்ந்திருக்காமல் உள்ளதாகிய சித்சொரூபம் எது ஒன்று உள்ளதோ அதையே நானென்று எப்போதும் பரிவோடு தியானித்து எல்லா பற்றுக்களையும் நீ ஒழித்து விடுவாயாக.

48. அறிவால் தேசம், ஜாதி இவற்றைச் சேர்ந்தவை, குற்றமற்றதாக கருதப்படும் குலம், அந்த குலத்தின் ஒழுக்கம் இவை பற்றிய அத்தனை பாவனைகளையும் நீக்கி, நானென்னும் தன்னிலை பாவனையொன்றையே பற்றிக் கொண்டு பயமின்றி எப்பொழுதும் அப்பியாசம் செய்வாய்.

49. நான் ஒருவனே இருக்கிறேன். எனக்கு உரிமையானவன் ஒருவனுமில்லை. நானும் வேறு ஒருவனுக்கும் உரியவன் அல்ல. எவனொருவனுக்கு நான் உரியவனோ அவனையும் நான் காணவில்லை. எனக்கு எவனாவது உரியவனோ என்றால் அவனையும் நான் காணவில்லை.

44. தொந்தமென் றாசிரயஞ் சொல்லப் படுமாமத்
தொந்தம் விடப்பரந் தோன்றுமே — பந்தமில்
சீவன்முத் தன்யோகி தேகத் தியாகத்தா
லாவன் விதேகமுத்த னன்றுவினை — மேவும்

45. உடலை விராகத் தொழித்திடுகை புத்தி
யுடையவராற் செய்ய வொணாதே — யுடலிதனை
யாரம்பித் துள்ளவினை யற்றவுட னிவ்வுடல
பாரந்தா னேயகலும் பாருடலுட் — சாரும்

46. இதயகம லத்தே யகமுருவா மெச்சித்
ததுநிமல நிச்சலமே யாகு — முதிக்கு
மகங்கார நீக்குதலா லச்சித்தே முத்தி
சுகங்கொடுப்ப தென்று துணியா — யகஞ்சேர்

47. சருவ வுபாதியுஞ் சாரா துளசித்
துருவ மெதுவொன் றுளது — நிரந்தர
மந்தச் சிவமகமென் றன்பாற் றியானித்தே
யெந்தவா சத்தியுநீ யெற்றுதி — புந்தியால்

48. தேசமுஞ் சாதிமுத லாமிவற்றைச் சேர்ந்தனவு
மாசகல்வர் ணாசிரம மன்னினவும் — பேசுமிப்
பாவனைக ளையகற்றிப் பற்றியே தன்னிலையின்
பாவனையே யென்றும் பழகுபய — மேவா

49. ஒருவனா னெற்குரிய னோரொருவ னில்மற்
றொருவற்கில் யானு முரிய — னொருவ
னெவற்குரியன் யானவனைக் கண்டிலேன் யானெற்
கெவனுரியன் கண்டிலேன் யானே — யவிகார

50. மாறுதலற்ற நானே பரப்பிரம்ம சொரூபமும், ஞான மூர்த்த குருநாதனுடைய சொரூபமும், உலக ஈசுவர சொரூபமும் ஆவன் என்னும் நிச்சயத்தை அடைந்தவனே, நல்ல ஸ்திர முக்தியடைந்த புருஷனாவான். முரண்பட்ட மார்க்கங்களில் செல்பவன் பந்தமுடையவன் என்று நீ அறிவாயாக.

51. தேகமே நான் என்னும் புத்தி நீங்கி எப்பொழுது ஒருவன் தன்னை தேகமற்றவனாகவே, தனது ஞானக் கண்ணினால் தானே காண்பானோ அப்போதே அனைத்து ஆசையையும் ஒழித்து, சாந்தியின் சுகத்தை தானே அடைந்தவனாவான்.

52. தானாம் ஏக சொரூபனும், சாஸ்திரங்களில் பிறப்பில்லாதவன் என்றும் ஈசுவரனென்றும் யார் சொல்லப்படுகின்றானோ; எவன் சரீரமில்லாதவனாகவும், குணமற்றவனாகவும், ஆத்ம சொரூபமாகவும் இருக்கின்றானோ அவனே நான். இதில் சந்தேகமில்லை.

53. அகம் என விளங்கும் ஏகனாகிய நான் உண்மையறிவாகிய விஞ்ஞானமாத்திரமாக உள்ளவனும், மிகத் தூய்மையானவனும், நன்கு விடுபட்டவனுமாவேன். எப்பொழுதும் எங்கும் இருப்பவனாவேன். அந்தக் காரணங்களினால் நான் அந்தக் காலதேசம் எனப்படுபவைகளுள் ஏதொன்றும் அல்லன். எது ஒன்றினாலும் பற்றுவதற்கோ விடுவதற்கோ முடியாதவன். துக்கமற்றவன்; எப்பொழுதும் பிரம்ம சொரூபமயமானவன்.

54. உயிரோடு ஒன்றாகிய மனித உடம்பில், உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை அந்தக்கரணத்தை முதலாகவும், புறத்திலுள்ள சருமப் போர்வையை இறுதியாகவும் கொண்ட, இந்த தேகத்திற்கு அன்னியமாய் சித் சொரூபமாய், பூரணமாய், அம்ருதமாய், தான் தானாகவே நிலைபெற்றுப் பிரகாசிக்கும் ஆத்ம சொரூபமே நானென்று அறிவாய்.

50. நானே பரப்பிரம்ம நாதனுல குக்கீச
னானாவிந் நிச்சய மார்புருடன் — றானேநன்
முத்தனா மன்றி முரண்வழியிற் செல்புருடன்
பெத்தனா மென்றுநீ பேணுடனான் — புத்தியகன்(று)

51. என்றொருவன் றேக மிலனாக வேதன்னைத்
தன்ஞானக் கண்ணினாற் றான்காண்ப — னன்றே
யனைத்தினு மாசை யறவிட்டுச் சாந்தி
தனைத்துன்னி யோனாவன் றானாய்த் — தனித்த

52. அசனீச னென்றெல்லா நூற்களிலு மார்தா
னிசைக்கப் படுவானோ வென்று — மசரீர
னாங்குணமில் லானான்மா வாமவனே யான்சிறிது
மீங்கிதனி லைய மிலையகமா — யோங்குமொரு

53. விஞ்ஞான மாத்ரன் விசுத்தன் விமுத்தனா
னெஞ்ஞான்று மெங்கு மிருப்பனா — னஞ்ஞாயத்
தொன்றலனான் பற்றவிட வொண்ணானான் றுக்கமிலா
னென்றும் பிரம்மமயன் யானுயிரு — டொன்றாகி

54. உச்சி முதலுள்ளங் காலளவா யுட்புறம்
பிச்சருமப் போர்வை யிறுதியா — மிச்சடத்துக்
கன்னியசித் தாய்முழுது மாயமுத மாய்த்தானே
மன்னியவான் மாநான் மதியெதிரே — துன்னிய

55. எதிரில் நினைந்து காணக்கூடிய சராசரங்களுக்கும் இறைவன் நானே. இவையாவும் தோன்றுவதற்கு தாயாகவும் தந்தையாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருப்பவன் நானே. முக்தியடைய விருப்பமுள்ளவர்கள், அந்தத் துரிய நற்பதமாகிய என்னையே, உள்ளத்தில் தீவிரமாக தியானிப்பார்கள்.

56. உள்முகமாகி என்றும் பூஜிப்பதற்கு உரியவன் நானே. சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா முதல் சகல தேவர்களும், தேவமாதர்களும், மனிதர்களும், யக்ஷர்களும், கந்தர்வர்களும், நாகலோகவாசிகளும், மற்ற எல்லோரும் பலவிதமான யாகங்களாலும் என்னையே அர்ச்சிப்பர் என்று அறிவாயாக.

57. அருளை விரும்பி அரிய தவங்களினாலும், தானங்களினாலும் அநேகவித நல்லறங்களாலும், யாவரும் என்னையே அர்ச்சித்து வழிபடுவார்கள். பரந்த சராசர சிருஷ்டியும், அதைச் சார்ந்த அனைத்தும் ஒருவனாகிய நானே என்று உணர்வாய்.

58. உருவம் அற்றதால் ஸ்தூல, சூட்சும, காரண தேகோபிமானி நான் அல்ல. படைப்பிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் பந்து நானே. ஞானமே சொரூபமாக உடையவனும் சர்வவியாபகனும் ஈசுவரனும் குற்றமற்றவனும் அவஸ்தைகள் எதுவுமில்லாதவனும் நானே ஆவன். பின்னும் நான் பிரபஞ்சமற்றவன்.

59. நிலையானது என்று கூறப்பட்ட உண்மைப் பொருளானது ஆதியற்றது. அதுவே ஞான வடிவமாய் பிறப்பில்லாத மிகப் பழமையானது. அப்படிப்பட்ட அது இதய குகையில் எப்பொழுதும் உருவமோ உலகமோ களங்கமோ உவமையோ பற்றுக்கோடோ இல்லாமல் மனதினால் நினைப்பதற்கோ பார்ப்பதற்கோ உணர்ந்து கொள்வதற்கோ முடியாததாக இருக்கிறது.

55. இந்தச் சராசரங்கட் கீசனான் றாயுடனே
தந்தையுந் தந்தைக்குத் தந்தையுஞ் — சிந்தனங்கொண்
டத்துரிய நற்பத மாமெனையே சிந்திப்பார்
முத்தி விருப்பர் முனைந்துள்ளே — நித்தம்

56. பிரமன்முன் னாந்தேவர் பேணுமர மாதர்
நரரியக்கர் கந்தருவர் நாகர் — நிரையாலு
மெச்சம் பலவாலும் யான்பூச் சியனெனையே
யர்ச்சிப்ப ராரு மறியருளை — நச்சி

57. அருந்தவங்க டான மனேகவிதத் தாலு
மருச்சிப்ப ரென்னையே யாரும் — பரந்த
சரவசர பூதங்கள் சார்ந்துளமற் றெல்லா
மொருவனாம் யானே யுணர்வா — யுருவிலதால்

58. தூலனுஞ் சூக்குமனுஞ் சூனியனு மல்லனான்
ஞாலத்தின் பந்துநான் ஞானமயன் — மேலு
நிரந்தரனீ சன்விமல னீடவத்தை யில்லோன்
பிரபஞ்ச மில்லோனான் பின்னுந் — திரமாம்

59. அனாதிவிஞ் ஞான மசன்மம் புராணந்
தனாதித யக்குகையிற் றங்கி — யெநாளு
முருவமுல கங்களங்க மொப்புப்பற் றின்றிக்
கருதக்கா ணக்கொளப்போ காது — மருவு

60. எப்போதும் சாசுவதமாய் விளங்குவதும், இடைவெளியற்றதும், எங்கும் நிறைந்த சற்பிரம்மமாகிய அந்தப் பரவஸ்துவே நானென்று, நீ அடிக்கடி அந்த ஏகாத்ம சொரூபத்தையே தியானம் செய். இப்படிப் பலகாலம் எவனொருவன் 'அவனே நான்' என்னும் **பா**வனை செய்து, சலனமற்று இருப்பானோ அவன் சாவா நிலையுற்று பரப்பிரம்ம சொரூபமாகவேயாவான்.

61. பெண்ணரசே! யாவரும் சிறந்த முத்தியை அடையும் பொருட்டு ஆன்மாவாய் நிலைபெறும் ஞான லக்ஷணம் மேற்கூறியவாறு உனக்குச் சொல்லப்பட்டது. இனி இப்பொழுது (அந்த ஞானத்தையடைய) ஒருவன் அனுஷ்டிக்க வேண்டியவைகள் என்னால் உபதேசிக்கப்படும். நீ ஒருமுகமான கவனத்துடன் நிலைத்து இருந்து கொண்டு அதனைக் கேட்பாயாக.

62. பாவங்கள் தீர புண்ணிய நீராடுவதும், மந்திரங்களை ஜெபிப்பதும், நித்திய ஹோமம், தேவதாமூர்த்திகளின் பூஜை, அக்னியில் செய்யப்படும் காரியங்கள் முதலான எந்தவொரு சாதனமும், என்னால் சொல்லப்பட்ட இந்த ஞானப் பயிற்சி மேற்கொண்டவன் என்றுமே அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்று நீ திடமாய் நம்புவாயாக.

63. சிரத்தையுடன் செய்யும் நியமங்களோ, க்ஷேத்திர பீடங்களில் விளங்கும் மூர்த்தி வழிபாடுகளோ, நாம அர்ச்சனைகளோ, பித்ருக்களை குறித்து செய்யும் காரியங்களோ பூமியில் தோன்றியுள்ள புனித தீர்த்த யாத்திரைகளோ, பிரசித்தி பெற்ற புண்ணிய விரதங்களோ இவை யாவும் ஞானாப்பியாசிக்கு தேவையில்லை.

64. ஞானாப்பியாசிக்கு நூல்களில் கூறப்பட்ட தர்ம அதர்மங்களினால் ஏற்படக்கூடிய பலன்கள் இல்லை. விசேஷித்துக் கூறப்படும் திதிகளும், தொன்றுதொட்டு செய்துவரும் கர்மங்களும் இல்லை. எல்லாவித கருமங்களையும் ஒழித்துவிடு, எல்லாவிதமான ஆசாரங்களையும் விட்டுவிடு.

60. சனாதனமா யந்தரமில் சற்பிரம்மஞ் சோக
மெனாநீ யடிக்கடிபா ரேகம் — பனாஞுமெவன்
பாவித்து நிச்சலனா நிற்பன் பரப்பிரம்ம
மாவனமு தத்தன்மை யார்ந்தான்ம — பாவமாம்

61. ஞானமிவ் வாறா நவன்றிடப் பட்டதா
லானமுத்தி யாரு மடைதற்கு — மானினியின்
றாசார மென்னா லருளப் படுமிதுகே
ணீசாவ தானமா நின்றுநிலை — மாசகல

62. நீராட லுஞ்செபமு நித்தியவோ மம்பூசை
யாரழலின் காரிய மாதியாத் — தேருமோர்
சாதனமு மன்னோன் றனக்கென்று மின்றாமான்
மாதரசி யேநீ மதியிதனை — யாதரஞ்சேர்

63. நேமமுங் கேத்திரபீ டத்தி னிகழ்சேவை
நாமவர்ச்ச னம்பிதிரர் நற்கருமம் — பூமருவு
தீர்த்தநல் யாத்திரை தேசார் விரதங்க
ளோர்த்திடவற் கில்லையா மொன்றுமே — யார்த்த

64. தருமா தருமந் தருபல னில்லை
மருவு திதியுலக மன்னுங் — கருமமிலை
யெல்லாக் கரும மிகந்திடுல காசார
மெல்லா விதத்து மிகந்திடுக — சொல்லார்

65. புகழப்படும் சமயத்தின் ஆசாரங்கள் அனைத்தையும் தள்ளிவிடு. ஏனெனில், எல்லாவிதமான கர்மங்களும் பந்தங்களாக அமையும். ஆதலால், பலவாகத் தோன்றும் சங்கற்பங்களையும், விகற்பங்களையும், தான் பிறந்த ஜாதி தருமத்தையும், அவற்றைச் சார்ந்துள்ள பற்றுதலையும் தூரத் தள்ளிவிடு.

66. தாமாகவே வரும் அணிமா மஹிமா முதலான பலவித ஸித்திகளும், பாதாளத்தில் மறைவாகவுள்ள பொருள்களை கண்ணெதிரில் தோன்றச் செய்யும் ரசாயன ஸித்திகள் என்பவையும், கண்ணுக்கு எதிரே பிரத்யக்ஷமாக கிடைத்தாலும் அவற்றை மனதில் பற்றாமல் சாதகன் விலகி நிற்க வேண்டும்.

67. நூல்களில் கூறப்பட்ட ஸித்திகள் யாவும் ஜீவனுக்கு பந்தங்களாகும். மேலும் இவை தீய ஒழுக்கத்தைத் தரக்கூடியவையாகும். எங்கும் பிரகாசிக்கும் சித்சொரூபத்தினிடமே, அந்த மேலான முக்தி சுகமானது இருக்கிறதேயன்றி, மேலே சொல்லப்பட்டவைகள் யாவற்றிலும் இல்லை.

68. உள்ளத்தில் சோர்வு நீங்கி, எல்லாவித அவஸ்தைகளிலும், எந்த விசேஷத்தினாலும், தவறு நேராமல் ஆத்ம சிந்தனா யோகத்தில் மனம் ஊன்றியவனாய், எக்காரணத்தை முன்னிட்டாவது உண்டாகிற சந்தேகத்தினால், க்ஷேத்திரத்திலும் அதன் பீடத்திலும் சேவை செய்ய வேண்டுமென்ற குதூகலமாகிய மோகம் மீண்டும் உண்டானால், அதனை விலக்கி விடுவாயாக.

69. சதியே! கேட்பாயாக. ஞானாப்யாசியான நல்ல விவேகி, ஞான சொரூபத்தை ஆசிரயித்த மனத்தினனாய் இருக்க வேண்டும். அற்பமாகிய புழு, பூச்சி, பட்சி, மரம், செடி, கொடி உருவாகவுள்ள தாவரங்கள் முதலான எல்லாவுயிர்களுக்கும் ஒருபோதும் நாசமடையும்படியான எந்தக் காரியமும் அவன் செய்யக் கூடாதென்று அறிவாய்.

65. சமயவா சாரமே சற்றுமின்றித் தள்ளாய்
சமத்தமாங் கன்மந் தளையா — யமையுமாற்
சங்கற்ப மும்விகற்பஞ் சாதிதரு மஞ்சார்ந்த
சங்கத்தை யுந்தூரத் தள்ளுவாய் — பொங்கும்

66. பலவிதமாஞ் சித்திகளும் பாதாள முன்பா
யிலகுமிர சாயனமு மென்ப — வுலகிற்
பிரத்தியட்ச மாகவே பெற்றாலும் பற்ற
லொருவுகவே சாதக னுண்ணின் — றுரைத்த

67. இவையாவும் பந்தகமா மிச்சீவ னுக்கே
யிவைமேலுந் தாழ்ந்தநெறி யீவ — விவைக
ளியாவையினு மப்பரம முத்திசுக மில்லை
வியாபகமாஞ் சித்துருவம் விட்டுள் — ளயாவறுத்(து)

68. எவ்விசே டத்தானு மெல்லா வவத்தையினுந்
தவ்வலற யோகந் தரித்தோனா — யெவ்விதத்து
மையத்தாற் கேத்திரபீ டத்திற் குதூகலமா
மையலெழின் மற்றதனை மாற்றுதி — நொய்ய

69. கிருமிகீ டம்பறவை கேள்சதியே தாரு
வுருமுதலா மெல்லா வுயிரு — மொருபோது
நாசமுறச் செய்யவொணா நல்லறிஞ னுண்மையறி
வாசிரயித் தோனா யறியருளா — ராசயனாய்

70. அருளை அடைய விரும்புபவன், பூஜைக்காக எந்த ஒரு வேரையும் பிடுங்க வேண்டாம். எந்தவொரு இலையினையும் பறிக்க வேண்டாம். எந்த உயிர்களுக்கும் கோபத்தினால் துன்பத்தைத் தரக்கூடிய செயல் எதுவுமே செய்ய வேண்டாம். மலர்களை ஆதரவு இன்றிச் செடியிலிருந்து பறிக்க வேண்டாம்.

71. செடியிலிருந்து தாமாகவே உதிர்ந்த தூய மலர்களை எடுத்து, சிவனுக்கு உகந்த பூஜை செய்வதே கடமையாகும். இதைவிட்டு, மந்திரங்களை ஜெபித்து அழிவை உண்டாக்குவதும், ஏவுதல் விரட்டுதல் செய்வதும், பகைமை உண்டாக்குவதும், பிரசித்தமான ஸ்தம்பனமும் பின்னும்,

72. துன்பம் தரக்கூடிய மந்திர ஜபத்தினால் உயிர்களுக்கு ஜுரத்தை உண்டு பண்ணுதல், பூதங்களையும் கிரகங்களையும் பிறர்மேல் ஏவி விடுதல், ஆவேசத்தை உண்டு பண்ணுதல், வசியமாக்குதல், ஆகர்ஷணம் செய்தல், மோகமடையச் செய்தல் என்ற இந்த இழிவான கர்மங்களைச் செய்யாது ஒழிக. கல்லிலும், மரக்கட்டையிலும், பூஜை செய்வதை ஒழித்து விடுவாயாக.

73. அழியாத முக்திபெற, க்ஷேத்திர பீடங்களில் விளங்குகின்ற தேவதைகளின் பொருட்டாகக் காட்டப்படும் மாமுத்திரைகளையும், அவற்றை உத்தேசித்துச் செய்யப்படும் யாகங்களையும் நீக்கி, இதற்குமுன் அவற்றைச் செய்து வந்ததினால் மனதில் ஏற்பட்ட வாசனைகளையும் அழித்து, எங்கும் நிறைந்த சித்சொரூபத்தையே தியானிப்பாயாக.

74. உள்ளத்தில் சமதிருஷ்டியை உடையவனாய், எந்த ஒரு பொருளிலும் ஆசை கொள்ளாமல், சுக துக்கங்கள் நேரிடும் காலத்தில் அவை இரண்டிலும் சம **பா**வமுற்று, நண்பர்கள், விரோதிகள் ஆகிய இருபாலரிடத்தும் சமதிருஷ்டியுடையவனாய், ஓட்டிலும், பொன்னிலும் பேதமற்ற சமபுத்தியுடையவனாய் இருப்பாயாக.

70. வேரெதுவுந் தான்பிடுங்க வேண்டா மிலையினையும்
வேறுபடுத் துஞ்செயலும் வேண்டாமே — சீறி
யினாத செயவேண்டா மெவ்வுயிர்க்கும் பூவு
மனாதரவாய்க் கிள்ளவேண் டாங்காண் — மனாது

71. சுயமாக வேயுதிர்ந்த தூமலர்கள் கொண்டே
செயக்கடவன் பூசை சிவனுக் — கியற்றியிடு
மாரணமுச் சாடனமுன் மற்றவித்து வேடணமும்
பேருற்ற தம்பனமும் பின்னின்னல் — கூரும்

72. சுரமொடு பூதங்கோ டுன்னுமா வேச
முரண்வசிய மாகருட மோக — முரைத்தவிக்
குத்திரகன் மங்கள் குயிற்றற்க கற்கட்டை
யொத்தவற்றிற் பூசை யொழியழியா — முத்தியுறக்

73. கேத்திரபீ டத்திற் கிளர்தேவ தைப்பொருட்டாச்
சேர்த்திடுமா முத்திரையுஞ் செய்மகமு — நீத்துமுன்
செய்யவற்றின் வாதனைக ளூர்த்தே வியாபகமா
மெய்யறிவு தன்னையே மேவுளத்தே — செய்ய

74. சமத்துவமே யுற்றுச் சருவாம லாசை
சமனாய்ச் சுகதுக்கச் சார்விற் — சமனாகி
மித்திரர்க ளல்லாதார் மேலுமோட் டிற்பொன்னி
லொத்தகருத் தோனாகி யுற்றகமே — சித்தம்

75. மனம் உள்முகப்பட்டு, இந்திரியங்களினால் அனுபவிக்கக் கூடிய விஷயங்களில், ஒருபொழுதும் ஆசை வைக்காமல், அகத்தில் எனதென்னும் மமதையை ஒழித்து, அறிவு சோர்ந்து போகாமல் வலிமையுறும்படிச் செய்து, எதனிடமும் ஆசையோ பயமோயின்றி, எப்பொழுதும் ஆத்ம சொரூபத்திலேயே ரமித்துக் கொண்டிருப்பவன் மாசற்ற யோகியாவான் என்று அறிந்திடுவாய்.

76. தூயவனாகி, நிந்தையிலும், புகழ்கின்ற துதியிலும் சமபாவமுடையவனாய், எல்லா உயிரினங்களிடத்திலும் சமமான மனநிலையுடையவனாய், எந்நாளும் மாறாமல், தன்னுயிர் போலவே அனைத்துயிர்களிடத்திலும் சமநோக்குடன் பொருந்தியிருக்க வேண்டும்.

77. அமைதியில் நிலைபெற்று தர்க்க வாதங்கள் புரிவதையும், லௌகீக கோஷ்டியையும் விலக்குவாயாக. பாழும் கலகத்தையும் தவிர்ப்பாயாக. சாஸ்திரங்களைக் கற்ற கோஷ்டியையும் சாராமல் நீங்கிவிடு. தீய சொற்களுடன், பிறரைப் புகழும் நல்ல வார்த்தைகளையும் விடுவாயாக.

78. உள்ளத்து விரைந்து எழும் பொறாமையும், பிறர் மீது கோள் சொல்வதும், ஆடம்பரமும், விருப்பமும், அவற்றைச் சார்ந்த வெறுப்பானதும், மனதில் எழக்கூடிய ஆசையும் கோபமும் பயமும் துக்கமும், ஆகிய இந்த எல்லா விக்ஷேபங்களையும் நீ மெல்ல மெல்ல நீக்கி விடுவாய்.

79. பூர்வ வாசனையின் இரட்டைகளாகிய சுக துக்கம் அனைத்தையும் தொடராத வண்ணம் விலக்கி, எப்பொழுதும் ஜனக் கூட்டங்களை விட்டு விலகி ஏகாந்தமாயிருப்பவன், இந்தச் சரீரத்துடன் சர்வஞ்ஞனாகி தேஜஸ்ஸுடன் பிரகாசிப்பான் என்று அறிவாய்.

80. அஞ்ஞானத்தை அழிக்கும் மெய் ஞானத்தினால்தான் நல்ல முக்தி பதத்தை அடையமுடியும். மற்ற சித்திகளினால், அத்தகைய மேலான பயனின்றாயினும், அப்யாசிகளாயிருப்பவர்கள் அதைத் தெரிந்தும் குற்றம் மிகுந்த போகங்களிலும், அணிமா, மஹிமா முதலான சித்திகளிலும் மோகம் கொண்டு, அவற்றை அடைய வேண்டிடுவர்.

75. பொறிவிட யத்திலொரு போதும் விருப்ப
முறவிடா துண்மமதை யோட்டி — யறிவுரமுற்
றாசைபய மற்றென்று மான்மாவி லேரமிப்பன்
மாசிலா யோகி மதியதனா — லாசில்

76. சமனாகி நிந்தையிற் சாற்றுதுதி யிற்பின்
சமனாகிச் சர்வபூ தத்துஞ் — சமதிட்டி
மன்னிடவே வேண்டுமான் மாறாம லெந்நாளுந்
தன்னுயிர்போல் மன்னுயிரிற் றான்மோன — மன்னி

77. ஒருவுகவீண் வாத முடனுலக கோட்டி
யொருவுக பாழ்ங்கலக மும்பின் — னொருவுக
சாத்திர கோட்டியைச் சாராதே தீச்சொல்லோ
டேத்துநற் சொல்லு மிகந்திடகத் — தார்த்தெழூஉம்

78. ஈரிடையுங் கோளு மிடம்ப மிராகமுஞ்
சாருமம் மாச்சரியந் தானும்பின் — னேரிடு
மாசையுங் கோபமு மச்சமுஞ் சோகமு
நீசருவ மெல்லமெல்ல நீக்குவாய் — வாசனையால்

79. தொந்த மனைத்துந் தொடரா தகற்றியே
சந்ததமுந் தான்சனத்தைச் சாராதா — னிந்த
வுடம்புடனே யெல்லா முணர்ந்திடுவா னாகித்
திடம்பெறுதே சார்ந்தொளிர்வன் றேராய் — மடந்தெறுமெய்ஞ்

80. ஞானத்தி னாலேயே நன்முத்தி யவ்வண்ண
மேனைய சித்திபய னின்றேனு — மூனமாம்
போகத்துஞ் சித்தியினும் பூண்டுமயல் வேண்டிடுவர்
சாதகரா யுள்ளவர்க டாமறைபோ — யோதும்

81. தூய்மையே உருவான யோகியானவன், வேதங்கள் போற்றும் அஷ்டமா சித்திகள் வந்து சேர்ந்தாலும், அகன்று ஒழிந்தாலும், அதைப் பற்றிய மகிழ்ச்சியோ வாட்டமோ அடையாதவனாய், நிர்மலமான பிரம்ம சொரூபத்தை உணர்ந்து, மோக்ஷ வீட்டை அடைவதிலிருந்து தப்பவே மாட்டான் என்று அறிவாயாக.

82. ஆத்ம சொரூபத்திற்கு இடமான இந்தச் சரீரமானது பஞ்ச பூதங்களால் ஆனது. ஏக சிவனும் அந்தச் சரீரத்திலேயே அமர்ந்திருக்கின்றான். பிரிவற்று எங்கும் நிறைந்திருக்கும் சிவம் முதலாக இந்தப் பூவுலக பரியந்தம் அனைத்துலகமும் அந்த சங்கரனுடைய சொரூபமேயாகும். இதுவே உண்மை.

83, 84. உயர்ந்தவரான இத்தகைய ஞானியைக் கண்டு தரிசனம் செய்து, வாசனை மிகுந்த சந்தனாதிகளும், பழங்களும், மலர்களும், நறுமணம் வீசும் தீம்புகையும், பரிமணங்கள் கலந்த ஸ்நானத்திற்குரிய தீர்த்தமும், உடையும், உணவும், நெஞ்சுருகும் உள்ளன்புடன் கொடுத்து, மனம், வாக்கு, காயமென்னும் முக்கரணங்களினாலும் ஒன்றாக இசைந்து, எவர் ஆராதித்திடுவார்களோ அவர்கள், பிறப்பற்று ஜீவன்முக்தி என்னும் ஐக்கிய மார்க்கத்தில், இச்சையுள்ளவராயின், மோட்ச வீட்டையடைவர். எனதாருயிரே! புருஷ ஸ்ரேஷ்டனாகிய அந்த ஞானியைப் பூஜிப்பவர், அவனால் செய்யப்படும் புண்ணியத்தின் பலனையும், நிந்திப்பவன் பாவத்தின் பலனையும் அடைவார்களென்று மனதில் கொள்வாய்.

85. இவ்வாறு அவ்வீசன் கூறி, மேலும் கூறலானான். ஞானமும், ஆசாரமும் யாவையென்று உன்னால் கேட்கப்பட்டதோ, அவையாவும் விவரமாக உனக்கு அறிவிக்கப்பட்டது. என்னால் போதிக்கப்பட்ட அந்த மார்க்கங்கள் அனைத்தும், காலோத்தர ஞானமே யாகும். உன் மனதில் இன்னும் ஏதாவது கேட்கத் தகுந்தது உள்ளதெனில், மாதே நீ பகர்வாய்!

உலகம் உய்வதற்காக முக்தன் ரமணேசன் மொழி பெயர்த்து உதவிய இந்த நூல் உத்தம சாதகர்களுக்கு வழி காட்டும் தீபமாகும்.

81. அணிமாதி யானகுண மார்ந்திடுக வன்றி
யணுகாம லேயஃ தகல்க — வுணர்ந்தே
விமலமா மப்பதியை வீடுறுத றப்பா
னமலமாந் தேகி யறிதா — னமரிடமாம்

82. ஆகந்தா னைம்பூத வாகார மங்கேயே
யேகசிவன் றானு மினிதமர்வன் — பாகமிலா
தெங்கு முறுசிவமுன் னித்தரையீ றாமுலகஞ்
சங்கரன் றன்னுருவந் தான்மெய்யே — துங்கனாம்

83. இவ்வறிஞ னைக்கண் டிசைகரண மூன்றானுஞ்
செவ்வியகந் தங்கனிபூத் தீம்புகையுந் — திவ்வியமா
நீராட லாடையூ ணெஞ்சுருகு மன்பாலீந்
தாராரா தித்திடு வார்பிறவி — சாராமல்

84. அப்படியே வீடுறுவ ராயிருரே யம்முத்தி
மெய்ப்படியு மார்க்க விருப்பமுளா — ரப்புருடற்
பூசைபுரி வாரன்னோன் புண்ணியத்தைப் பாவத்தை
யேசுபவ ரெய்திடுவா ரெண்ணென்றவ் — வீசன்

85. அறிவுடனா சாரமெவை யாசிக்கப் பட்ட
தறிவிக்கப் பட்டதெனா லந்த — நெறியாவுங்
காலஞா னந்தான் கருத்தில்வே றேவினவற்
பாலதெது மாதே பகரென்றான் — ஞாலமுய்ய

முத்தன் ரமணன் மொழிபெயர்த் தீந்தவீ
துத்தம ருள்ளத் தொளி.

[நிறைவாக, அருணாசல பஞ்சரத்னம் (பக்கம் 63, 65) பாடப்படுகிறது]